**புடவை பங்கீட்டுச் சபை - 2010**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட உயர் தகவல்களுக்கும் விளக்கங்களுக்கும் அமைய புடவை பங்கீட்டுச் சபை 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கு உரிய கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்தது என்றும், இவ்வறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டவாறான விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களைத் தவிர, 2010 திசெம்பர் 31 இல் உள்ளபடி புடவை பங்கீட்டுச் சபையின் நிலைவரம் மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் செயற்பாடுகளிலிருந்தான நிதிசார் விளைவு மற்றும் காசோட்டம் என்பவற்றை உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கியதாக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்று, நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

இலங்கைக் கணக்கீட்டு நியம இலக்கம் 16 இற்கு அமைவாக ஊழியர் பணிக்கொடையினை செலுத்துவதற்காக ஒதுக்கப்பட்டுள்ள ரூபா 1,683,200 நிதியை முதலீடு செய்யப்பட்டமை தொடர்பான தகவல்கள் நிதிக் கூற்றுக்களுடன் வெளிப்படுத்தப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 1.2.2 கணக்கீட்டு குறைபாடுகள்

**கணக்குகளில் குறைத்துக் காட்டல்கள்**

பெறவேண்டிய கணக்குகளின் கீழ் ரூபா 257,955 தொகையான பெறவேண்டிய வட்டி வருமானம் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன.

### 1.2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | |
| (i) 5.1.1 மற்றும் 5.1.2 ஆம் பந்தி | கூட்டுத் திட்டம் தயாரிக்கப்படாதிருந்ததுடன் செயல்நடவடிக்கைத் திட்டமும் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 5.2.4 ஆம் பந்தி | குறித்த நிதியாண்டு ஆரம்பமாவதற்கு 03 நாட்களுக்கு முன்னர் வருடாந்த பாதீட்டினைத் தயாரித்து பணிப்பாளர் சபையிடம் சமர்ப்பித்து அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (iii) 9.2 ஆம் பந்தி | அங்கீகரித்த பதவியணியும் ஆட்சேர்ப்பு நடைமுறையும் அமைப்பு வரைபடமும் பொது முயற்சிகள் திணைக்களத்தில் பதிவுசெய்து கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (iv) 8.3.9 ஆம் பந்தி | கூட்டுத்தாபனங்கள் மற்றும் சபைகள் என்பவற்றினது வளங்களை வரிசை அமைச்சினால் பயன்பாட்டிற்கு எடுக்கப்படக் கூடாது எனத் தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்கு முரணாக புடவைக் கைத்தொழில் அமைச்சரின் அலுவலகத்தில் சேவை புரியும் உத்தியோகத்தர்களுக்காக சம்பளம் மற்றும் படிகளாக 2010 ஆம் ஆண்டில் ரூபா 256,620 செலுத்தப்பட்டிருந்ததுடன், அதனை மீள நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2007 இன் 14 ஆம் இலக்க பெறுமதி சேர்க்கப்பட்ட அடிப்படையிலான திருத்திய வரிச் சட்டம் | பெறுமதி சேர்க்கப்பட்ட அடிப்படையில் வரியுடன் பட்டியலைச் தீர்க்கும் போது அவ்வரியிலிருந்து 1/3 அளவொன்று நிறுத்தி வைக்கப்பட்டு தீர்க்கப்பட வேண்டிய போதிலும், ரூபா 157,897 தொகை நிறுத்தி வைக்கப்பட்டிருக்கவில்லை. |

### 1.2.4 போதிய அதிகாரத்தால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல்வாங்கல்கள்

(அ) 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஐந்தொகையில் நடைமுறைச் பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட்டுள்ள ரூபா 774,079 ஆன 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காசு வைப்புக்களும் செலுத்தவேண்டிய கணக்குகளில் காட்டப்பட்டிருந்த ஒரு ஆண்டிற்கு மேற்பட்ட ரூபா 303,269 ஆன தொகையும் நடைமுறையல்லா சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டுள்ள திறைசேரி உண்டியல் முதலீட்டிலிருந்து ரூபா 2,758,176 தொகையும் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டுள்ள பெறவேண்டிய கணக்குப் பெறுமதிகளிலிருந்து ஒரு ஆண்டிற்கு மேற்பட்ட ரூபா 1,279,960 தொகையும் அதாவது மொத்தம் ரூபா 5,115,484 ஐ உரிய அங்கீகாரமின்றி 2009 ஆம் ஆண்டில் கணக்குகளிலிருந்து பதிவழிக்கப்பட்டிருந்ததை மீளாய்வாண்டிலும் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மிகை ஒதுக்கீடு, தவறான கணக்குப் பதிவு போன்ற காரணத்தின் அடிப்படையில் எழுந்த மீதி என்பதால் பதிவழிக்கப்பட்டதாக தலைவர் தெரிவித்திருந்தார்.

(ஆ) செயற்படக்கூடிய பணிப்பாளர் சபையொன்று இல்லாத சந்தர்ப்பத்தில் ரூபா 4,038,136 தொகையான 2 ஐந்தொகை சொத்து விடயங்கள் மற்றும் ரூபா 1,077,348 ஆன 2 பொறுப்பு விடயங்கள் என்பவற்றை 2009 ஆம் ஆண்டின் இறுதியில் கணக்காளரினால் பதிவழிக்கப்பட்டதை மீளாய்வாண்டிலும் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதற்காக திறைசேரியின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகின்றது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதி மீளாய்வு

### 2.1.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டில் சபையின் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து ரூபா 2,286,406 மிகையொன்றை விளைவித்திருந்ததுடன் அதனையொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 6,470,570 ஆனமையால் மீளாய்வாண்டுக்கான நிதி விளைவுகளில் ரூபா 4,184,164 ஆன அதாவது 65% குறைவொன்றை காண முடிந்தது.

### 2.1.2 நிதி விளைவுகளின் மீளாய்வு

நிதி விளைவுகளில் பற்றாக்குறைக்காக வட்டி வருமானம் 35% ஆல் குறைவடைந்தமையும் உத்தியோகத்தர்கள் ஆட்சேர்க்கப்பட்டமையால் ஆளணிக்கான சம்பளங்கள் 25% ஆல் அதிகரித்தமையும் பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

## 2.2 செயற்பாட்டு மீளாய்வு

### 2.2.1 செயலாற்றுகை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

**சேவை வழங்கள்**

| | 2010 | 2009 | மாற்றங்கள்% |
|---|---|---|---|
| பதிவுசெய்யப்பட்ட ஆடைத் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை | 1226 | 1141 | 7 |
| தற்போது செயற்பாட்டிலுள்ள ஆடைத் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை | 668 | 723 | (7) |
| வரி செலுத்த வேண்டிய நிறுவனங்களின் எண்ணிக்கை | 423 | 309 | 37 |
| இரத்துச் செய்யப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை | 83 | 70 | 18 |
| மூடப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை | 52 | 39 | 33 |

### 2.2.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) சபையினால் புதிய அதிகாரச்சட்டமொன்றை தயாரிப்பதற்காக வெளி நபரொருவரை நியமித்து அந்த நபருக்கு ரூபா 45,000 இனை செலுத்துவதற்கு உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் அத் தொகையில் 2007 ஆண்டின் போது ரூபா 22,500 செலுத்தப்பட்டிருந்தது. 2007 மார்ச் மாத முடிவில் குறித்த நபரினால் வரைவு அதிகாரச்சட்டம் தயாரிக்கப்பட்டு பணிப்பாளர் சபைக்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும் 2011 மார்ச் மாதம் இறுதி வரைக்கும் அவ் அதிகாரச்சட்டத்திற்குரிய மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1997 மற்றும் ரூபா 1999 ஆம் ஆண்டுகளில் ரூபா 13 மில்லியன் தொகையை திறைசேரியின் 6000/0/0/3/606 ஆம் இலக்க பொது வைப்புக் கணக்கின் கீழ் வைப்புச் செய்யப்பட்டிருந்தது. இவ் வைப்பிற்காக வட்டிக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட மாட்டாது என அரசாங்க கணக்குகள் திணைக்களத்தினால் சபைக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

2005 யூலை 13 ஆந் திகதிய 30 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கைக்கு அமைய திறைசேரி உண்டியல்கள், பிணை வைப்புக்கள், அரசாங்க பிணைமுறிகள் அல்லது வேறு ஏதேனும் முதலீடொன்று எந்தவொரு நிறுவனத்தினாலேனும் பேணப்பட்டிருப்பின் அம் முதலீடுகள் பொதுத் திறைசேரியின் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு (Trust Fund) மாற்றம் செய்யப்பட வேண்டும் என அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் இச் சுற்றறிக்கை வெளியிடப்பட்டு 05 வருடங்கள் சென்றிருந்த போதிலும் இத் தொகையினை நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

-----------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2007 ஆம் ஆண்டில் செயற்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட இலத்திரனியல் கண்காணிப்பு (Electronic Monitoring System) முறைமையை அறிமுகம் செய்வதற்காக 2007 ஆகஸ்ட் 20 ஆந் திகதி தனியார் கணக்காய்வு நிறுவனமொன்றிற்கு ரூபா 921,265 கிரயத்தில் ஒப்பந்த வேலையொன்று கையளிக்கப்பட்டிருந்தது. எனினும் 2010 ஆம் ஆண்டு வரையில் மொத்தம் ரூபா 582,709 செலுத்தப்பட்டிருந்த போதிலும் குறித்த செயற்பாடு நிறைவேற்றப்படாமையால் அதற்காக செலவிடப்பட்ட நிதி பயனற்ற செலவினமாக அவதானிக்கப்பட்டது. இதற்கு மேலாக 2011 ஆம் ஆண்டிற்காக மீளாய்வாண்டில் கணக்குகளில் ரூபா 336,070 தொகையும் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தன.

(ஆ) சபை இயங்கிவரும் 4124 சதுர அடி பரப்பளவிலான கட்டிடத்தின் அலுவலக வாடகை, மின்சாரம் மற்றும் நீர் என்பவற்றிற்காக மீளாய்வாண்டில் ரூபா 5,760,958 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

மீளாய்வாண்டில் சபையின் பதவியணியில் சேவையிலீடுபட்டிருந்த உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 43 ஆக இருந்ததுடன், அலுவலகத்தின் இடவசதி மற்றும் செலவுகள் நிறுவன நடவடிக்கைகளுக்கு அவசியமானதை

விட கூடுதலாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. ஒரு உத்தியோகத்தருக்காக ரூபா 11,164 தொகை அலுவலக வாடகையாக மாதாந்தம் சபையினால் செலவிடப்பட்டிருந்தது. சபையின் புடவை பங்கீட்டு முறை முடிவுற்றிருந்ததுடன் ஆடைத் தொழிற்சாலைகளிருந்து வருடாந்தம் பெறப்படும் சேவைக் கட்டணங்களினைக் கொண்டும் நிலையான வைப்புக்களிலிருந்து கிடைக்கும் வட்டி வருமானத்தினைக் கொண்டும் நிறுவனத்தின் செலவினங்கள் மேற்கொள்ளப்படுவதனால் செலவினைக் குறைப்பதற்கு நிதி முகாமைத்துவ நடவடிக்கைகள் தொடர்பாக உரிய கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. 2011 பெப்ரவரி மாதம் வரையில் நிறுவனத்தினது உத்தியோகத்தர்களது எண்ணிக்கை 14 ஆக இருந்ததுடன், மேற்படி மாதாந்த வாடகை ரூபா 524,457 ஆனமையால் ஓர் நபரிற்காக அலுவலக வாடகையாக மாதாந்தம் 37,461 ஆக இருந்தது.

(இ) புடவை பங்கீட்டு சபைக்காக இணையத்தளம் ஒன்றை 2010 ஆம் ஆண்டினுள் ஆரம்பிப்பதற்காக ரூபா 95,835 செலுத்துவதற்கு நேர்ந்திருந்த போதிலும், இணையத்தளமொன்று ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. நிறுவனத்தின் தொடர்ந்தியங்கல் நிச்சயமற்ற நிலைமையில் இருப்பதால் இதற்காக உடன்படிக்கையின் பிரகாரம் இணங்கப்பட்டுள்ள தொகை சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கலாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 2.2.4 பணிப்பாளர் சபைக் கூட்டங்கள்

மீளாய்வாண்டிற்காக பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் நடாத்தப்படாமல் இருந்ததுடன், அதன் பிரகாரம் தீர்மானம் எடுக்கும் போது அது எவ்வித பங்களிப்பையும் செலுத்தியிருக்கவில்லை.

### 2.2.5 உள்ளகக் கணக்காய்வு

நிறுவனத்தினுள் போதியளவு உள்ளகக் கணக்காய்வொன்று இடம்பெற்றிருக்கவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைமைகளினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் அவ்வப்போது தலைவரது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகிறது.

(அ) பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

(ஆ) கடன் தீர்ப்பனவு

(இ) அலுவலக வாடகைக் கொடுப்பனவு

(ஈ) உத்தியோகத்தர் நியமனங்கள் மற்றும் பதவி உயர்த்துதல்